# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**-சமூக சீர்திருத்த மாத இதழ்-**

THIRU QURAN NARCHEYDHI MALAR - JULY 2020

மலர்: 13 இதழ்: 10 ஜுலை 2020 விலை: ரூ. 10



## ஆட்சியாளர்களுக்கு விசாரணை உறுதி!



## கொரோனா தற்கொலைகளில் தவறுண்டா?

## நோய் பரவலைத் தடுக்கும் இஸ்லாமிய வழிமுறைகள்







### அங்கத்தூய்மை செய்யும் வரிசைக்கிரமம்:

1. இறை நாமத்தில் தொடங்குதல் 2. மூன்று முறை இரு முன்கைகளையும் கழுவுதல். 3. மூன்று முறை வாய் கொப்பளித்தல். 4. இதில் ஒருமுறை மூக்கில் நீரிழுத்துச் சீற்றுதல். 5. மூன்று முறை முகம் கழுவுதல் 6. மூன்று முறை முழங்கை வரை இரு கைகளையும் கழுவுதல். 7. ஈரக்கையால் ஒருமுறை தலை தடவுதல் 8. அதே ஈரக் கையால் காதுகளை துடைத்தல் 9. மூன்று முறை கால்களை கணுக்கால் வரைக் கழுவுதல்.

## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூன்று!

1. தினசரியும் ஐவேளைத் தொழகைகளுக்கு முன் அங்கத் தூய்மை செய்து கொள்வது இஸ்லாமியர் மீது கடமையாகும். கொரொனோ மட்டுமல்ல எந்த ஒரு தொற்றும் நம்மை அண்டாமலிருக்க உதவும் ஒரு தற்காப்பு நடவடிக்கையாக இது இருப்பதால் இது இஸ்லாமியருக்கு மட்டுமல்ல, மாற்று மத அன்பர்களுக்கும் இது நல்லதே!

2. கூடவே ஒவ்வொரு அங்கத் தூய்மைக்குப் பின்னும் அந்த நேரத் தொழுகையையும் நீங்கள் நிறைவேற்றினால் உங்களுக்கு உங்களைப் படைத்த இறைவனோடு உரையாடவும் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு உண்டாகிறது. அதனால் உடல் நலத்தோடு மன நலமும் மேம்படும்!

3. மேற்கண்ட நடவடிக்கைகளை கீழ்கண்ட கொள்கை முழக்கத்தோடு- அதை மனமார உணர்ந்து உச்சரித்தால் -அது உங்களுக்கு இம்மையிலும் அமைதியான வாழ்க்கையைத் தரும். மறுமையில் சொர்க்கத்தையும் பெற்றுத் தரும். நரகத்தில் இருந்து பாதுகாக்கும்!

”லா இலாஹா இல்லல்லாஹ்- முஹம்மதுர் ரசூலுல்லாஹ்” (பொருள்: வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் அல்லாஹ் மட்டுமே- முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் )

ஆம், அன்பர்களே இதுதான் இஸ்லாம் என்பது. அனைத்து மனிதகுலத்திற்கும் சொந்தமான வாழ்வியல் கொள்கை!

இதை நீங்கள் பின்பற்ற ஒரு முஸ்லிம் குடும்பத்தில் பிறக்கவேண்டும் என்பது இல்லை. தொப்பியோ தாடியோ லுங்கியோ புர்காவோ அணிந்தவராக இருக்க வேண்டும் என்பதும் இல்லை. கண்ணியமான - வரம்பு பேணிய- ஆடை அணிந்தவராக இருந்தால் போதுமானது.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 13 இதழ்: 10 ஜூலை 2020 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

ஆட்சியாளர்களுக்கு விசாரணை உறுதி! -2
உங்கள் பரீட்சைக் கூடத்தைப் புரிந்து கொள்ளுங்கள் -5
கொள்ளை நோயே கருணையாக வந்தால்? -7
நோயும் முதுமையும் இல்லா வாழ்விடம் சொர்க்கம்! -8
கருணைக் கடலாம் கடவுளை அறிவது கடமை -10
நோய் நிவாரணப் பிரார்த்தனைகள் -12
நோய் - இறைவன்பால் திரும்புவதற்கான அழைப்பு! -13
ஜனாதிபதி மாளிகையில் பாமரர்கள்! -15
கொரோனா தற்கொலைகளில் தவறு உண்டா? -19
நோய் பரவலைத் தடுக்கும் இஸ்லாமிய வழிமுறைகள் -22
கொள்ளைநோய் பரவும்போது.. 24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **09845373775**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.com www.waytoparadise.in**

# ஆட்சியாளர்களுக்கு விசாரணை உறுதி!

**நாட்டுப்பற்று என்பது என்ன?**

உண்மையான நாட்டுப்பற்று அல்லது தேசப்பற்று என்பது அந்நாட்டில் வாழும் மக்களை ஜாதி,மத, மொழி, நிற பேதமின்றி அவர்களை உளமாற நேசித்தலும் அவர்களுக்கு நேரும் இடுக்கண்களைக் களையப் பாடுபடுதலும் ஆகும். இதைச் செய்யாமல் அந்நாட்டின் மண்ணை முத்தமிடுவதிலோ அல்லது ஆண்டுக்கு ஒரு முறை கொடிஏற்றி வணக்கம் செலுத்துவதிலோ அல்லது சில கவிதை வரிகளை அல்லது பாடல்களை உரக்கப் பாடுவதிலோ துளியும் இல்லை என்பதை அறிவோம். இதை உறுதிப்படுத்தியது கொரோனா தொற்றின்போது நம் நாட்டு ஆட்சியாளர்கள் நடந்துகொண்ட விதம்.

**கொரோனா தோலுரித்துக் காட்டிய நாட்டுப் பற்று**

அந்த வகையில் கொரோனா தொற்று நம் நாட்டின் ஆட்சியாளர்கள் நாட்டு மக்கள் மீது எவ்வளவு பற்று கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிச்சம்போட்டுக் காட்டியதை அறிவோம். ஊரடங்கு அறிவிக்கப்பட்ட உடன் நாட்டின் கடைநிலையில் உள்ள தொழிலாளர்கள் அனுபவித்த கொடுமைகளை சமூக வலைத்தளங்கள் மூலமாக நாம் அறிந்தோம். பிழைக்க வந்த இடத்தில் இருந்து சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்ல வாகன ஏற்பாடுகளை செய்து தர எந்த மத்திய மாநில அரசுகளும் ஆதிக்கம் படைத்தவர்களும் எவரும் முன்வராததால் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தங்கள் பயணச் சுமைகளையும்



குழந்தைகளையும் முதியோரையும் சுமந்துகொண்டு நடை பயணமாகவே சென்றார்கள் அவர்கள். உண்ணவும் பருகவும் ஏதுமின்றி உயிரை இழந்தவர்களும் அவர்களில் உண்டு. நோயுற்று இறந்தோரும் அவர்களில் உண்டு. வாழ்க்கையை வெறுத்து தற்கொலை செய்து கொண்டோரும் அவர்களில் உண்டு.



## ஆட்சியாளர்கள் விசாரிக்கப்படுவர்

நாட்டுமக்களின் நலன் காப்பதாக மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து அம்மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரியணை ஏறியவர்கள் இந்த ஆட்சியாளர்கள். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் பாமரர்கள்தானே என்ற அலட்சியத்தால் அவர்களின் துன்பங்களை மாநில அரசுகளும் மத்திய அரசும் கண்டு கொள்ளவில்லை என்றே தெரிகிறது. பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகள் தங்கள் கைவசம் இருப்பதால் தங்களை யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற எண்ணம் அவர்களை ஆட்கொண்டிருக்கலாம். அல்லது அடுத்த தேர்தலுக்குள் மக்களை மீண்டும் மூளைச்சலவை செய்து மீண்டும் அரியணை ஏறலாம் என்றும் அவர்கள் எண்ணி இருக்கலாம். எது எப்படியானாலும் அவர்களுக்கு மேலே அனைத்தையும் கண்டு கொண்டும் பதிவு செய்துகொண்டும் இருப்பவன் ஒருவன் உள்ளான் என்பதை நினைவூட்டுவது நம் கடமையாக உள்ளது.

ஆம், அவன்தான் இவ்வுலகைப் படைத்து பரிபாலிக்கும் இறைவன்.

அவன் தற்காலிகமாக தந்திருப்பதே இந்த ஆட்சியதிகாரம், இதுபற்றி இறைவன் என்னை விசாரிக்க உள்ளான் என்ற பொறுப்புணர்வு இருந்தால் நாட்டை ஆள்வோர் எவரும் பொதுமக்கள் படும் இன்னல்களைக் கண்டு அலட்சியமாக இருக்கவும் மாட்டார்கள். நாட்டின் சொத்துக்களை தனதாக்கும் முயற்சியிலும் ஈடுபடமாட்டார்கள். ஏன், இரவில் நிம்மதியாக தூங்கவும் மாட்டார்கள்!

**இறைவனின் இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

- **“உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளரும், பாதுகாவலரும் ஆவார். உங்களில் ஒவ்வொருவரும் அவரது கண்காணிப்பின், பொறுப்பின் கீழ் உள்ளவர்களைப் பற்றிக் கேட்கப்படுவார். ஆட்சியாளரும் பொறுப்பாளரே.. அவரிடம் அவரது குடிமக்களைப் பற்றி வினவப்படும்... “**

**அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) நூல்:புகாரி, முஸ்லிம்)**

ஆட்சியாளர்களே, இறைவனிடம் விசாரணை என்றால் சாதாரணமானது அல்ல. இவ்வுலகில் வலுவான வழக்கறிஞர்களை வைத்துக்கொண்டு சட்டத்தின் ஓட்டைகள் வழியாக தப்பிப்பதோ அல்லது நீதிபதிகளை மிரட்டியும் விலைக்கு வாங்கியும் தண்டனையில் இருந்து தப்பிப்பதோ எல்லாம் அங்கு நடக்காது. இவ்வுலகில் உங்கள் ஆட்சியின்போது நிகழ்த்தப்பட்ட அனைத்து அத்துமீறல்களுக்கும் மனித உரிமை

*மீறல்களுக்கும் உங்கள் மோசமான ஆட்சியின் காரணமாக குடிமக்கள் அனுபவித்த அனைத்து இடையூறுகளும் இன்னல்களும் இறுதித்தீர்ப்பு நாளன்று விசாரணைக்கு வரும். தொடர்ந்து அதற்கான தண்டனையும் வழங்கப்படும். சந்தேகத்திற்கு இடமின்றி நடக்க உள்ள நிகழ்வு இது. வினை விதைத்தவன் அதை அறுவடை செய்யாமலா போவான்?*

**உறுதியான இறுதியான விசாரணை**

**● அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம்அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும். அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும். (திருக்குர்ஆன் 36:65)**

**● எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான். (திருக்குர்ஆன் 99:7,8)**

*விசாரணைக்குப் பிறகு பாவிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் விதிக்கப்படும். அதுதான் மனிதனின் நிரந்தரமான அழியாத இருப்பிடம் ஆகும்.*

*அந்த நரகம் எப்படிப்பட்டது என்பதை விளங்க திருக்குர்ஆனைப் படியுங்கள். பல்வேறு இடங்களில் அதுபற்றி திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகிறான். உதாரணத்திற்கு கீழ்கண்ட வசனங்களைப் பாருங்கள்:*

**● நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது, வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும். (திருக்குர்ஆன் 78:21-30)**

**● ..... அநியாயக் காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம். (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப் படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும். மிகக் கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும். (திருக்குர்ஆன் 18:29)**


# நோய் நிவாரணம் பெற பிரார்த்தனை

● *நோயாளி ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டால் அவர்கள்,* **“அத்ஹிபில் பாஸ் ரப்பந் நாஸ் இஷ்ஃபி, வ அன்த்தஷ் ஷாஃபி, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக்க, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு சகமன்“** *என்று பிரார்த்திப்பார்கள்.*

*(பொருள்: மனிதர்களைப் படைத்துப் பராமரிப்பவனே! நோயைப் போக்கி அறவே நோயில்லாதவாறு குணமளிப்பாயாக. நீயே குணமளிப்பவன். உன் நிவாரணத்தை தவிர வேறு நிவாரணம் இல்லை.)*

# உங்கள் பரீட்சைக் கூடத்தைப் புரிந்து கொள்ளுங்கள்

உங்கள் எதிர்கால வாழ்வாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய - அரசாங்கத் தேர்வை எழுதுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது என்ன செய்வீர்கள்? அது நடக்கக்கூடிய இடத்தை முன்கூட்டியே அடைவீர்கள். அங்கு பேணவேண்டிய ஒழுங்குகளை அறிந்து அதில் கவனமாக இருப்பீர்கள். பரீட்சை நேரத்தின் வரையறைக்குள் உங்கள் முழு கவனமும் பரீட்சையை எப்படியாவது வெற்றிகரமாக நிறைவேற்றவேண்டும் என்பதிலேயே இருக்கும் அல்லவா?



இப்போது இந்த தற்காலிக உலகம் என்ற பரீட்சைக் கூடத்தை சற்று நினைத்துப்பாருங்கள். மரணத்திற்குப் பிறகு வர உள்ள உங்கள் எதிர்காலம் - அதுவும் முடிவில்லா வாழ்விடம் - சொர்கத்திலா அல்லது நரகத்திலா என்பதைத் தீர்மானிக்கும் பரீட்சைக் கூடம் இது.

● **”இறைவன் மீது ஆணையாக! மறுமையை ஒப்பிடும் போது இவ்வுலகம் என்பது உங்களில் ஒருவர் தம் ஆட்காட்டி விரலைக் கடலில் நுழைப்பதைப் போன்றதாகும். பின்னர் (கடலிலிருந்து எடுக்கும் போது) அந்த விரல் எந்த அளவுக்கு (தண்ணீரை) எடுத்துக் கொண்டு வருகிறது என்பதைக் கவனிக்கட்டும்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**அறிவிப்பவர்: முஸ்தவரித் (ரலி) நூல்கள்: முஸ்லிம், திர்மிதீ , இப்னுமாஜா**

அப்படியானால் இந்த விடயத்தில் அலட்சியம் காட்டமுடியுமா?

## பரீட்சைக் கூடத்தின் இயல்புகள்

உங்களை மீறிய ஒரு சக்திக்கு உட்பட்டுதான் இந்த பூமி என்ற பரீட்சைக் கூடத்தில் நுழைவிக்கப்பட்டு உள்ளீர்கள். உங்களைக் கேட்காமலே இதிலிருந்து வெளியேற்றப்படுவீர்கள். இதை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அனுபவப்பூர்வமாகவே இதை அன்றாடம் காண்கிறீர்கள். எனவே உங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் கீழே சொல்லப்படும் விடயங்களை உண்மை என புரிந்து கொண்டால் உங்கள் வாழ்க்கைப் பரீட்சை வெற்றிகரமாக அமையும். மறுத்தால் அதன் கொடிய விளைவுகளுக்கு ஆளாகவும் நேரிடும்.

## மரணம் வாழ்வும் இந்தப் பரீட்சைக்காகவே

● **உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான் மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன் மிக மன்னிப்பவன். (திருக்குர்ஆன் 67:2 )**

## இறுதி வெற்றி எது?

● ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில்தான் உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதி பலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)

## ஷைத்தான் பரீட்சையின் அங்கம்:

● இங்கு நேரான பாதையை மக்களுக்குக் காட்டித்தர இறைவன் தனது தூதர்களையும் தன் வேதங்களையும் அனுப்புகிறான். அதே நேரத்தில் இது ஒரு பரீட்சை என்ற காரணத்தால் இதில் ஷைத்தான் என்ற ஒரு கெட்ட சக்திக்கும் நம்மோடு வாழ அனுமதி வழங்கியுள்ளான்.

## மதிப்பெண்கள் இறைவன் இடுவதே:

● இங்கு இறைவன் எதை செய் என்று சொல்கிறானோ அதுவே நன்மை அல்லது புண்ணியம் ஆகும். எதை செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே தீமை அல்லது பாவம் ஆகும். அவற்றை இறைவனின் வேதம் மூலமாகவும் தூதர் மூலமாகவும் அறிகிறோம்.

## ஏற்றதாழ்வுகள் முரண்பாடுகள் இங்கு நியதி:

● இங்கு நல்லவையும் தீயவையும் நியாயமும் அநியாயமும் செல்வமும் வறுமையும் நம் முன் மாறிமாறி வரும். நல்லோர்களுக்குத் துன்பமும் கஷ்டமும் தீயோர்களுக்கு இன்பமும் மகிழ்ச்சியும் கிடைப்பதெல்லாம் இங்கு சகஜம். அவ்வாறு நன்மை செய்வதற்கும் தீமை செய்வதற்கும் அனைவருக்கும் வாய்ப்பளிக்கப்படும் இடமே இவ்வுலகம்.

## பரீட்சை அவனது டிசைன்

● யார் எவ்வாறு வேண்டுமானாலும் எதைக்கொண்டு வேண்டுமானாலும் பரீட்சிக்கப்படலாம். அவற்றின் நியாயம் அநியாயம் என்பது நமது சிற்றறிவுக்கு எட்ட வேண்டும் என்பது இல்லை. நீர்க்குமிழிகள் போல் வாழ்ந்து மறையும் மனிதர்களின் தீர்ப்புக்காக இறைவன் காத்திருக்க வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை.

## அதிபக்குவம் வாய்ந்த பரீட்சையாளன்

● இந்த பரீட்சையை எவ்வளவு பக்குவமாக நடத்துவது என்பதை மிக நுணுக்கமாக அறிந்தவன் இறைவன். அவனது அறிவுநுணுக்கமும் அளவிலா ஆற்றலும் நம்மைச்சுற்றி உள்ள படைப்பினங்களின் பக்குவமான அமைப்பிலும் அவற்றின் குறையற்ற இயக்கத்திலும் அது பிரதிபலிப்பதைக் காண்கிறோம். அற்பஜீவிகளான நம்முடைய சிற்றறிவுக்கு அறவே புலப்பட வாய்ப்பில்லை.

## அற்பமானதே மனித அறிவு

● அவன் எதுவரை அனுமதிக்கிறானோ மற்றும் எவற்றை நமக்கு அறிவித்துத் தருகிறானோ அவை மட்டுமே நமது அற்ப அறிவு என்பது. அதை வைத்துக்கொண்டு அந்த இறைவனின் அறிவையும் ஆற்றலையும் எடைபோடுவதும் அவனது திட்டத்தில் குறைகாண்பதும் மனிதனின் அறியாமையின் வெளிப்பாடே! மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட அற்பமான

தவணையில் தோன்றி மறையும் அற்பத்திலும் அற்பமான மனிதன் ஆதியும் அந்தமும் இல்லாதவனும் அளவிலா அறிவும் ஆற்றலும் கொண்டவனும் ஆன இறைவனுக்கு அவன் ஏற்பாட்டுக்கு மாற்று ஒன்றைப் பரிந்துரைப்பது அகங்காரத்தின் உச்சகட்டம் என்பதை நாம் உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

நோயும் கஷ்டங்களும் இந்த பரீட்சையின் பாகங்களாக வரும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளான். அவற்றைப் பொறுமையோடு எதிர்கொள்ளும் புண்ணியவான்களுக்கு சொர்க்கம் காத்திருக்கிறது என்பதையும் இறைவன் தெளிவுபடுத்தியுள்ளான்.

● **“நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்“ என்று கூறுவார்கள். இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்.“ (திருக்குர்ஆன் 2:155-157)**

# கொள்ளை நோயே கருணையாக வந்தால்?

இவ்வுலகத்தைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழ்பவர்களுக்கு இவ்வுலகிலும் அமைதியே! மறுமையிலும் அவர்களுக்கு அமைதியே வாய்க்கிறது. நோய்கள், கவலைகள் மற்றும் சோதனைகள் வாழ்வில் குறுக்கிடும்போது அவர்கள் அவற்றைக் கண்டு சாதாரண மனிதர்களைப் போல அரண்டு போவதில்லை. இறைவன் விதித்த விதியின் மீது நம்பிக்கை வைப்பதோடு உரிய தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். பிரார்த்தனையும் செய்கிறார்கள். இம்மையில் தங்கள் பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் மறுமையில் அதன் பலனைப் பெறுவோம் என்று உறுதியாக நம்புகிறார்கள். இவ்வாறு அவர்கள் தன்னம்பிக்கையை எந்நிலையிலும் இழப்பதில்லை.

● **“நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கொள்ளைநோய் குறித்துக் கேட்டேன். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள், “அது தான் நாடியவர்களின் மீது அல்லாஹ் அனுப்பும் வேதனையாக இருந்தது. ஆனால் இப்போது அதை இறைநம்பிக்கையாளர்களுக்கு அல்லாஹ் கருணையாக ஆக்கிவிட்டான். எனவே, இறைவனின் அடியார் ஒருவர் கொள்ளை நோய் பரவும் போது தமக்கு அல்லாஹ் எழுதிய விதிப்படியே அல்லாமல் எந்த நோயும் தம்மைத் தீண்டாது என உறுதி பூண்டவராகத் தம் ஊரிலேயே பொறுமையுடன் நிலை குலையாமல் இருப்பாராயின் அவருக்கு ஷஹீது (உயிர் தியாகி) க்கு கிடைக்கும் அதே போன்ற நன்மை மறுமையில் கிடைக்கும்” (அறிவிப்பு: ஆயிஷா (ரலி) - புகாரி)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

# நோயும் முதுமையும் இல்லா வாழ்விடம் சொர்க்கம்!

நோய்கள் நம்மைத் தாக்கும்போது மறுமை வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கை உள்ளவர்கள் எளிதில் மனம் சோர்ந்து போவதில்லை. இறைவிசுவாசிகள் எவ்வாறு ஆறுதல் அடைகிறார்கள் என்பதைப் பற்றி திருக்குர்ஆனில் *(2:155-157)* இறைவன் கூறுவதைக் கண்டோம்.

இது ஒரு தற்காலிகமான சோதனைக்கூடம் என்பதால் இங்கு வாழும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளும் வசதிகளும் கொடுக்கப் படுகின்றன. சிலருக்கு செல்வமும் சிலருக்கு வறுமையும் சிலருக்கு ஆரோக்கியமான உடல்கட்டும் சிலருக்கு உடல் ஊனமும் என மாறி மாறி கொடுக்கப்பட்டு இங்கு மனிதர்கள் பரிசோதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து இருப்பதால் மற்றவர்களைப் பார்த்து அவர்கள் பொறாமைப் படுவதுமில்லை. தங்களுக்கு வாய்த்த நோய் குறித்தும் ஏழ்மை குறித்தும் பலவீனம் குறித்தும் அளவுக்கு மீறி கவலைப் படுவதுமில்லை.

**மறுக்க முடியாத உண்மைகள் சில...**

● நமது உண்மையான மற்றும் நிலையான முடிவில்லாத வாழ்க்கை என்பது மரணத்துக்குப் பிறகு உள்ள வாழ்க்கைதான். அது ஒன்று சொர்க்கத்தில் அமையும் அல்லது நரகத்தில் அமையும். இவை இரண்டும் அல்லாத வேறு ஒரு வாழ்க்கை கிடையாது.

● இன்று நமக்கு கிடைத்திருக்கும் வாழ்க்கை என்ற வாய்ப்பு ஒரே ஒரு முறை கிடைப்பது. மீண்டும் மீண்டும் பிறப்பது என்பது கிடையாது. அதுவும் அவரவரது மரணம் வரை மட்டுமே இவ்வாய்ப்பு நீடிக்கும்.

● எனவே இவ்வாழ்க்கை என்ற பரீட்சையில் மனோ இச்சைகளுக்கு இடம் கொடாமல் நம்மைப் படைத்தவன் வழங்கும் வாழ்க்கை வழிகாட்டுதல் படி வாழ்ந்தால் நாம் நிரந்தர இன்பங்கள் நிறைந்த மற்றும் சொர்க்கத்தை சென்றடைவோம். அந்த வாழ்க்கைத் திட்டமே இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது.

**மறுமை சாத்தியமா?**

சாதாரண ஒரு இந்திரியத் துளியில் இருந்து உருவாகி இன்று பூமியில் நடமாடிக் கொண்டிருக்கிறோம் என்பதை சற்று சிந்தித்தாலே சொர்க்கம் நரகம் என்பது கற்பனையோ மாயையோ அல்ல என்பதை நாம் உணரலாம். இம்மை என்பது எப்படி வாஸ்தவமோ அதைவிட வாஸ்தவம் மறுமை என்பது. இதை நடத்திக் கொண்டிருக்கும் இறைவனுக்கு நம்மை மீண்டும் படைப்பது என்பது கடினமானது அல்ல.

இறுதித்தீர்ப்பு நாளின்போது ஒவ்வொரு மனிதனும் இப்பூமியின் மீது செய்த புண்ணியங்களும் பாவங்களும் எடுத்துக்காட்டப் படும். புண்ணியங்களை அதிகமாக சம்பாதித்தவர்களுக்கு சொர்க்கம் விதிக்கப்படும். பாவங்களை அதிகமாக சம்பாதித்தவர்களுக்கு நரகம் விதிக்கப்படும்.

**சொர்க்கம் என்பது எப்படி இருக்கும்?**

நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அளவற்ற இன்பங்களும்

*முறையாக அனுபவிக்கும் வாழ்விடமே சொர்க்கம். அது ஓர் சாந்தியும் சமாதனமுமான இருப்பிடம். அங்கு கவலை, தீமை, பகை, சோர்வு, நோய், முதுமை, பஞ்சம், போன்ற எதற்குமே இடம் இல்லை. திகட்டாத இன்பங்களில் ஊறித் திளைக்கும் இடம் அது.. தோட்டங்களும் பூங்காவனங்களும் மாசற்ற நீரூற்றுகளும் உயர் மாளிகைகளும் சுவைமிக்க கனிகளும் உணவுகளும் பானங்களும் அளவின்றி அனுபவிக்க இறைவன் ஏற்பாடு செய்த இடம்! என்றும் இளமையோடு இருக்கும் இடம்! காரணம் மரணம் என்பது இனி இராது!*

**● "வல்லமையும் மாண்பும் மிக்க இறைவன், "என் நல்லடியார்களுக்காக எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்த காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் தோன்றியிராத இன்பங்களை நான் (சொர்க்கத்தில்) தயார்படுத்தி வைத்துள்ளேன்" என்று கூறினான். எனினும், (சொர்க்கத்தின் இன்பங்கள் குறித்து) இறைவன் உங்களுக்கு அறிவித்ததுள்ளது சொற்பமே!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**(அறிவிப்பு : அனஸ்(ரலி) நூல்: முஸ்லிம்)**

*இதோ தனது திருமறையில் இறைவன் கூறுகிறான்:*

**● நிச்சயமாக எவர்கள் இறைநம்பிக்கை கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவன் அவர்கள் இறைநம்பிக்கை கொண்ட காரணத்தினால் நேர்வழி காட்டுவான். இன்பமயமான சுவனபதிகளில் அவர்களுக்குக் கீழ் நதிகள் ஓடிக் கொண்டிருக்கும். (திருக்குர்ஆன் 10:9)**

**● பொன் தட்டுகளும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கும் இன்னும் அங்கு அவர்கள் மனம் விரும்பியதும், கண்களுக்கு இன்பம் தருவதும் அதிலுள்ளன. இன்னும், "நீங்கள் இங்கு என்றென்றும் தங்கியிருப்பீர்கள்!" (என அவர்களிடம் சொல்லப்படும்.) (திருக்குர்ஆன் 43:71)**

**● பயபக்தியுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள சுவர்க்கத்தின் உதாரணமாவது: அதில் மாறுபடாத தெளிந்த நீரைக் கொண்ட ஆறுகளும், தன் சுவை மாறாத பாலாறுகளும், அருந்துவோருக்கு இன்பமளிக்கும் மது ரச ஆறுகளும், தெளிவான தேன் ஆறுகளும் இருக்கின்றன. இன்னும், அதில் அவர்களுக்கு எல்லா விதமான கனிவகைகளும், தங்கள் இறைவனின் மன்னிப்பும் உண்டு. (இத்தகையோர்) நரகத்தில் எவன் என்றென்றுமே தங்கியிருந்து, கொதிக்கும் நீர் புகட்டப்பட்டு (அதனால்) குடல்களெல்லாம் துண்டு துண்டாகிவிடுமோ அவனுக்கு ஒப்பாவாரா? (திருக்குர்ஆன் 47:15)**

### கழிவுகள் இல்லா ஆரோக்கியமான உடல்

● *இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

"சொர்க்கவாசிகள் சொர்க்கத்தில் உண்பார்கள் பருகுவார்கள். மலம் கழிக்கமாட்டார்கள். மூக்குச் சிந்தவுமாட்டார்கள். சிறுநீர் கழிக்கவுமாட்டார்கள். அவர்கள் உண்ணும் உணவு கஸ்தூரி மணம் கமழும் வியர்வை போன்று, ஏப்பமாக வெளியேறும். மூச்சு விடுமாறு அகத்தூண்டல் ஏற்படுவதைப் போன்று இயல்பாகவே இறைவனைத் துதித்துக்கொண்டும் போற்றிக்கொண்டும் இருக்குமாறு அவர்களுக்கு அகத்தூண்டல் ஏற்படும்." அறிவிப்பு: ஜாபிர் (ரலி) அவர்கள் (புகாரி)

# கருணைக் கடலாம் கடவுளை அறிவது கடமை

கொடிய நோய்கள் பாதிக்கும்போது ஒரு நோயாளி தன்னம்பிக்கை இழப்பதற்கும் நிராசை அடைவதற்கும் ஒரு முக்கிய காரணம் தான் அதுவரை இவ்வுலகில் அனுபவித்த சொத்து, சுகம், உறவு, ஆதரவு இவை அனைத்தும் கைவிட்டுப் போகிறதே என்ற கவலை. இது மன அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் அதேவேளையில் நம்மைப் படைத்து அயராமல் பரிபாலித்து வரும் இறைவனைப் பற்றி அறிந்தவர்களின் மனோ நிலை இதற்கு நேர் மாற்றமாக இருக்கும். அவர்கள் அந்த இறைவனை சந்திக்கப் போகிறோம் என்ற உணர்வில் ஆறுதலும் பேரானந்தமும் அடைவார்கள். அதைத்தான் இறைவன் இவ்வாறு கூறுகிறான்:



● **ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள். இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்." (திருக்குர்ஆன் 2:156,157)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

### கருணையின் உறைவிடமே இறைவன்

இன்று நம்மோடு உறவாடிக்கொண்டிருக்கும் மனிதர்களில் யார் நம்மோடு அன்பு மிக்கவர்கள் என்று கேட்டால் நாம் யாருமே தமது பெற்றோரையே அதிலும் குறிப்பாக தாயார்தான் என்றுதான் கூறுவோம்.

தொடர்ந்து, "அந்தத் தாயைப் படைத்தது யார்? தாய் உள்ளத்தில் என்றும் வற்றாத தாய்ப் பாசம் என்பதை விதைத்தவன் யார்? தாயின் மாரில் நமக்காக தாய்ப் பாலை சுரக்கச் செய்தவன் யார்?" என்று கேட்டுப்பாருங்கள்.

இந்தக் கேள்விகளுக்கு விடைதேடும்போதுதான் இறைவன் என்பவன் எத்துணைக் கருணைமிக்கவன் என்பதை உணர்கிறோம்.

இவை அனைத்தும் நம்மீது கொண்ட அன்பின் காரணமாகவே என்பதை நாம் உணரும்போது அவனை நேசிக்காமல் இருக்க முடியுமா?

● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**அன்பின் நூறு பாகங்களும் இறைவனுக்கே உரியவையாகும்.**

**அவற்றில் ஒன்றை மனிதன், ஜின்,மிருகங்கள், ஊர்வன ஆகியவற்றுக்கிடையே இறக்கினான். இந்த ஒரு பங்கினால்தான் அவை ஒன்றன் மீதொன்று பாசம் கொள்கின்றன. பரிவு காட்டுகின்றன. அதன் மூலம்தான் காட்டு விலங்குகூட தன் குட்டிமீது பாசம் காட்டுகிறது. (அவற்றில்) தொண்ணூற்று ஒன்பது பாகம் அன்பை இறைவன் ஒதுக்கி வைத்துள்ளான். அவற்றின் மூலம் மறுமை நாளில் தன் (நல்ல) அடியார்களுக்கு (விஷேசமாக) அன்பு காட்டுவான். (அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) (புகாரி) )**

அப்படியென்றால் அந்த இறைவனின் கருணையை நினைத்துப் பாருங்கள். இதன் காரணமாகவே அவனை அளவற்ற அருளாளன் (அர்ரஹ்மான்) என்றும் நிகரற்ற அன்புடையவன் (அர்ரஹீம்) என்றும் கூறுகிறோம். அதாவது இவ்வுலகில் அனைவருக்கும் பொதுவாக அருள்புரிபவனும் அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழ்ந்தவர்களுக்கு மாத்திரம் மறுமையில் அருள்புரிபவனும் என்பது இதன் பொருள்.

● **அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். நியாயத் தீர்ப்புநாளின் அதிபதி (திருக்குர்ஆன் 1: 3, 4)**

● **அவனே அல்லாஹ், வணக்கத்திற்குரியவன், அவனைத் தவிர வேறு நாயன் இல்லை, மறைவானதையும், பகிரங்கமானதையும் அறிபவன், அவனே அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். (திருக்குர்ஆன் 9:22 )**

## இறைவனின் தன்மைகள்

இறைவனைப்பற்றிய தவறான சித்தரிப்புக்களே மக்களிடம் இறைநம்பிக்கை இல்லாமல் போவதற்கும் அவன் மீது அவநம்பிக்கை ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது. பலவீனமான படைப்பினங்களை எல்லாம் காட்டி அவற்றையெல்லாம் கடவுள் என்று சித்தரிக்கும் போது உண்மை இறைவனைப்பற்றிய மரியாதை உணர்வு மனித மனங்களில் இருந்து அகன்று போய் விடுகிறது.

மாறாக இம்மாபெரும் பிரபஞ்சத்தையும் அவற்றில் உள்ளவற்றையும் அப்பாற்பட்டவற்றையும் படைத்து பரிபாலித்து வருபவனே அந்த இறைவன் என்றும் அவன் நம்மீது அளவிலா கருணை கொண்டவன் என்றும் மிக நெருக்கமானவன் என்றும் மக்களுக்கு கற்பித்தால் உண்மை இறைநேசமும், இறையச்சமும், தன்னம்பிக்கையும் அவர்களுக்கு உண்டாகும்.

அப்படிப்பட்ட பண்புகளைத்தான் இறைவேதம் திருக்குர்ஆன் நமக்குக் கற்பிக்கிறது:

● **நபியே நீர் கூறுவீராக! “அல்லாஹ் அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை.” (திருக்குர்ஆன் 112: 1-4)**

இறைவனின் தன்மைகளை இவ்வாறு புரிந்துகொண்டு இடைத்தரகர்களுக்கோ மூடநம்பிக்கைகளுக்கோ வீண் சடங்குசம்பிரதாயங்களுக்கோ இடம் கொடாமல் அவனை நேரடியாக

*வணங்க வேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம்.*

**இறைவனின் அழைப்பு:**

**● (நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)**

**● "என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய கருணையில் அவர் நம்பிக்கையிழக்க வேண்டாம் - நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் - நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன் மிக்கக் கருணையுடையவன்" (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக. (திருக்குர்ஆன் 39:53)**

**அடியார்களை நெருங்கக் காத்திருப்பவன்**

*இறைவன் தன்னைப்பற்றி இவ்வாறு கூறியதாக நபிகளார் கூறினார்கள்:*

**"என் அடியான் என்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூருவேன். அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவு கூர்ந்தால் அவர்களைவிடச் சிறந்த ஓர் அவையினரிடம் அவனை நான் நினைவு கூர்வேன். அவன் ஒரு சாண் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் ஒரு முழமளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் (வலதும் இடதுமாக விரித்த) இரண்டு கைகளின் நீள அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனை நோக்கி ஓடிச் செல்வேன்"**

*(அறிவிப்பு: அபூஹுரைரா(ரலி) - புகாரி)*

# நோய் நிவாரணப் பிரார்த்தனைகள்

**● அஊதுபிகல்லாஹும்ம மினல் பரஸி வல் ஜுனூனி வல் ஜுதாமி வமின் ஸய்யியில் அஸ்காம்**

*(பொருள்: வெண்குஷ்டம், பைத்தியம், தொழுநோய், மற்றும் பிற கொடிய நோய்கள் அனைத்தை விட்டும்- யா அல்லாஹ் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். (நூல்: ஸஹீஹுல் ஜாமிஃ.)*

**நம் உடலில் எங்காவது வேதனையை உணர்ந்தால்:**

*வேதனை ஏற்பட்ட இடத்தின் மீது கையை வைத்து* **"பிஸ்மில்லாஹி"** *(அல்லாஹ்வின் பெயரால்) என்று மூன்று முறை கூறவேண்டும். தொடர்ந்து* **"அ ஊது (B)பில்லாஹி வ குத்ரத்திஹி மின் ஷர்ரி மா அஜிது வ உஹாதிரு"** *என்று ஏழு முறை கூற வேண்டும்.*

*(பொருள்: எனக்கு வந்திருக்கின்ற மற்றும் நான் பயந்து கொண்டிருக்கின்ற தீமையில் இருந்து நான் அல்லாஹ் மற்றும் அவனது ஆற்றலைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகிறேன்) (நூல்: முஸ்லிம்)*

# நோய் - இறைவன்பால் திரும்புவதற்கான அழைப்பு!

● இன்று என்னவெல்லாமோ செய்ய வேண்டும் என்று இருந்தேனே!...

● எத்தனை பேருக்கு இன்று வாக்கு கொடுத்திருக்கிறேன்...

● நான் இன்று போகாவிட்டால் பல இலட்சம் ரூபாய் வியாபார ஒப்பந்தம் ரத்தாகி விடுமே!

● அந்த இண்டர்வ்யூவுக்கு நான் போகாவிட்டால் ஒரு வருடம் நஷ்டமாகி விடுமே!

● நேற்றுவரை நான் பரிபூர்ணமாக நம்பியிருந்த என் உடல் இன்று என்னோடு ஒத்துழைக்க மறுக்கிறதே!

திடீரென நோய் வந்து நம்மை முடக்கிப் போட்டால் வெளிப்படும் அங்கலாய்ப்புகளே இவை!

'என் உடலுக்கு நானே சொந்தக்காரன்' என்றும் 'எப்போதும் என் ஆணைக்குக் கட்டுப்படுவதே என் உடல்' என்றும் 'என்னால் எதையும் சாதிக்க முடியும்' என்றும் 'என்னை மிஞ்ச யாரும் இங்கில்லை' என்றும் போலியான மாயையில் உழலும் மக்களை திருத்தி நிதானத்துக்குக் கொண்டு வரும் வேலையை செய்கிறது நோய் என்ற அற்புதம்!

ஆம், நோய் என்பது நம்மைப் படைத்தவன் புறத்திலிருந்து வந்துள்ள எச்சரிக்கை என்பதை அதிமுக்கியமாக நாம் உணர வேண்டும்! கண்களை மூடிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கும் குதிரையை அதன் மேலுள்ள குதிரைஒட்டி மெதுவாக கடிவாளம் கொண்டு இழுக்கும் போது அக்குதிரை நிதானத்தை அடைகிறது. அதுபோன்ற ஒரு செயலே நோய் என்பதும்!

மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும்போது இறைவனைப் பற்றியோ, இறைவன் புறத்திலிருந்து அனுபவித்துக் கொண்டு வரும் எண்ணற்ற அருட்கொடைகளைப் பற்றியோ சிறிதும் பொருட்படுத்துவதில்லை. தன்னிலை மறந்து கண்ணை மூடியவனாக ஓடிக்கொண்டிருக்கும் அவன் அவனது உடல், பொருள் ஆவி என அனைத்துக்கும் சொந்தக்காரன் தன்னைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன்தான் என்பதை மறந்து விடுகிறான். அவனது கருணை இல்லாமல் தன்னால் இங்கு வாழ முடியாது என்பதையும் அவன் கொடுத்துவரும் எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறான் என்பதையும் எளிதாக மறந்து விடுகிறான். அப்படிப்பட்ட மனிதனை நிதானப் படுத்த இறைவன் விடுக்கும் எச்சரிக்கையே நோய் என்பது! நோய் வரும் முன் வரை தனது உடல் இயக்கங்களை சமநிலையில் இயக்கிவந்த இறைவனின் கருணையை நினைவூட்ட வருகிறது நோய்! அவ்வாறு இறைவனை நினைவூட்டி மனிதனை பாவங்களில் இருந்து மீட்டு நல்லவனாக மாற்ற வருகிறது நோய்!

● **(நபியே!) உமக்கு முன்னர் இருந்த சமூகத்தாருக்கும் நாம் (நம்) தூதர்களை அனுப்பினோம் அச்சமூகத்தாரை நோயைக் கொண்டும் வறுமையைக் கொண்டும் பிடித்தோம் அவர்கள் பணிந்து வரும் பொருட்டு.**

(திருக்குர்ஆன் 6:42)

**படைத்தவன்பால் திரும்புவோம்**

எனவே நோய் வரும்போது நாம் மிக மிக முக்கியமாக உணர வேண்டியவை :

● நம்மைப் படைத்து பரிபாலித்து வரும் கருணை மிக்க இறைவன் ஒருவன் இருக்கிறான்.

● நாம் இதுவரை தங்கு தடையின்றி அனுபவித்து அருட்கொடைகளுக்கு நம் இறைவனுக்கு நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

● அந்த ஒருவன் மட்டுமே நம் அனைவருக்கும் இறைவன். அவனை மட்டுமே நாம் வணங்க வேண்டும். அவன் மட்டுமே நம் பிரார்த்தனைகளுக்கு பதில் அளிக்க முடியும்.

● அப்படிப்பட்ட இறைவனை நேரடியாக விளித்துப் பிரார்த்திக்க வேண்டும். நமக்கு வாய்த்துள்ள கஷ்டங்களையும் குறைகளையும் நீக்குமாறு முறையிட வேண்டும். நோயிலிருந்து விரைவில் நிவாரணம் நல்குமாறு கோர வேண்டும். நமது குறைகளையும் பிரார்த்தனைகளையும் இறைவனிடம் முறையிட எந்த இடைத்தரகர்களையும் நாடக்கூடாது. அவனுக்கு இணையாக வேறு யாரையும் தெய்வங்கள் என்று கருதி வணங்கக்கூடாது. அவன் அல்லாத எந்தப் பொருளையும் அல்லது உயிரினங்களையும் நோக்கி 'கடவுளே' என்று அழைத்து அவனை இழிவு படுத்தக் கூடாது.

● **அல்லாஹ்தான் உங்களைப் படைத்தான் பின் உங்களுக்கு உணவு வசதிகளை அளித்தான் அவனே பின்னர் உங்களை மரிக்கச் செய்கிறான். பிறகு அவனே உங்களை உயிர்ப்பிப்பான் -இவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யக் கூடியதாக உங்கள் இணை தெய்வங்கள் இருக்கிறதா? அல்லாஹ் மிகவும் தூயவன் அவர்கள் இணை வைப்பதை விட்டும் மிகவும் உயர்ந்தவன். (திருக்குர்ஆன் 30:40)**

திருக்குர்ஆனில் இறைவன் நமக்கு இவ்வாறு பிரார்த்திக்குமாறு கற்றுத்தருகிறான்:

● **"இறைவா! உன்னையே நாங்கள் வணங்குகிறோம் உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்" (திருக்குர்ஆன் 1 : 4)**

படைத்தவனை விட்டு விட்டு அவனது படைப்பிங்களை வணங்குவதோ அவைகளிடம் பிரார்த்திப்பதோ நமக்கு எந்த பயனையும் தராது. அது பாவமாகும். அதனால் நோயும் குணமாகாது மாறாக இறைவனது கோபத்தை அது தூண்டும். திருமறை மூலம் இறைவன் கற்றுத்தருவதைப் பாருங்கள்

● **அவன் எத்தகையவனெனில், அவன்தான் என்னைப் படைத்தான் மேலும், அவனே எனக்கு பின்னர் வழிகாட்டுகின்றான். எனக்கு உண்ணவும் அருந்தவும் தருகின்றான். மேலும், நான் நோயுற்றால் அவனே எனக்கு குணமளிக்கின்றான். அவனே என்னை மரணிக்கச் செய்வான் பின்னர் மீண்டும் எனக்கு வாழ்வளிப்பான். (குர்ஆன் 26:78-81)**

மேற்கண்டவற்றை உணர்ந்து நம்மைப் படைத்தவன்பால் திரும்பி பாவ மன்னிப்பு கோர வேண்டும்.


# ஜனாதிபதி மாளிகையில் பாமரர்கள்!

புலம்பெயர் தொழிலாளர்கள் போன்று கொரோனா ஊரடங்கால் கடுமையான பாதிப்புக்கு உள்ளானவர்கள் ஒரு மாநிலத்தின் முதல்வரையோ அல்லது நாட்டின் பிரதமரையோ சந்தித்து தங்கள் குறைகளை முறையிட முற்பட்டால் என்ன நடக்கும்? நமக்கு அனைவருக்கும் தெரிந்ததே! அந்த தலைவர்கள் வாழும் சொகுசான வசிப்பிடங்களின் வாயில்களை யாரும் அவ்வளவு எளிதில் கடந்து உள்ளே செல்ல முடியாது. மீறிச் சென்றால் காவலாளிகளும் காவல்துறையும் அவர்களை தடியடி நடத்தித் துரத்தியிருக்கும்!

இன்று சாதாரண பிரஜைகள் மட்டுமல்ல, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும் கூட ஒரு நாட்டின் அதிபரை அல்லது பிரதமரை சந்திப்பது என்பது கற்பனைக்கு எட்டாத விஷயம். அதிலும் சமூகத்தின் கடைநிலையில் உள்ளவர்கள் - பிறரிடம் தேவைக்காக கரம் நீட்டும் பிச்சைக்காரர்கள் - ஒரு நாட்டின் அதிபரை நேரடியாக சந்திப்பது என்பது சாத்தியமான ஒன்றா?

அது சாத்தியமாயிருந்த காலகட்டத்தில் நடந்த ஒரு நிகழ்வை நாம் இங்கு காண்போம். இங்கு நாம் காண இருக்கும் அதிபர் யார் தெரியுமா? ஆம், அவர்தான் உலகின் கால்வாசி மக்களால் உயிருக்குயிராக நேசிக்கப்படும் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள். அவரிடம் ஆட்சியாளர்களுக்கும் பிரஜைகளுக்கும் முன்மாதிரி உண்டு. நபிகளாருக்கு நாட்டின் தலைமையும் ஆன்மீகத் தலைமையும் ஒருசேர கைவந்திருந்த நேரம் அது. அப்போது நடந்த ஒரு நிகழ்வைப்பற்றி நபித்தோழர் ஜரீர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறியதாவது:

மதீனா நகரில் நபிகளாரின் வீட்டோடு ஒட்டி ஓலைக் கூரை வேயப்பட்டுக் கட்டப்பட்டிருந்த அந்த பள்ளிவாசலில் ஒரு நாள் நாங்கள்



முற்பகல் நேரத்தில் அவர்களோடு இருந்தோம். (மஸ்ஜிதுன்னபவி (நபிகளாரின் பள்ளி) என்று அழைக்கப்படும் அந்தப் பள்ளிவாசலின் இன்றைய காட்சியைத் தான் நீங்கள் மேலே படத்தில் காண்கிறீர்கள்)

அப்போது செருப்பணியாத, (அரை) நிர்வாணிகளான, வட்டமாய் கிழிந்த கம்பளி ஆடை அல்லது நீளங்கி அணிந்த ஒரு கூட்டத்தார் தம் (கழுத்துகளில்) வாட்களைத் தொங்கவிட்டவர்களாக இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அக்காலத்தில் பயணிகள் தற்காப்புக்காக வாட்களையும் தங்களோடு எடுத்துச் செல்வது வழக்கம். அவர்களில் பெரும்பாலானோர் ”முளர்” என்ற குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நபிகளாரைப் பற்றியும் முஸ்லிம்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருப்பார்கள் போலும்.

அவர்களது ஏழ்மை நிலையைக் கண்ட இறைத்தூதர் (ஸல்) அவர்களது முகம் நிறமாறிவிட்டது. உடனே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒருவிதத் தவிப்பு நிலையுடன் வீட்டுக்குள் சென்றுவிட்டு வெளியே வந்தார்கள். தோழர் பிலால் (ரலி) அவர்களிடம் தொழுகைக்காக மக்களை அழைக்க உத்தரவிட்டார்கள்.

அவ்வாறே பிலால் (ரலி) அவர்கள் ”அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்” என்று தொழுகைக்காக வழக்கமாக அழைக்கும் வாசகங்களால் மக்களைக் கூவி அழைத்தார்கள். இஸ்லாமிய வழக்கில் இதை “பாங்கு“ அல்லது “அதான்“ என்று சொல்வார்கள். இதையே இன்று பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கிகள் மூலம் அழைத்து வருவதை நீங்கள் காண்கிறீர்கள்.

அந்த பாங்கோசையைக் கேட்ட மக்களும் உடனே அனைத்து காரியங்களையும் நிறுத்திவிட்டு தொழுகைக்காக ஆயத்தமானார்கள். தொழுகைக்கு முன் வழக்கமாக செய்யும் அங்கத்தூய்மை - அதாவது கை,கால், முகம், போன்றவற்றை நீரால் கழுவி - சுத்தம் செய்து மக்கள் வழக்கம்போல பள்ளிவாசலை அடைந்தார்கள். அங்கு பள்ளிவாசலில் அமர வைக்கப்பட்டு இருந்த ஏழை மக்களை அனைவரும் கண்டார்கள். எல்லோர் முகங்களிலும் வியப்பு மேலிட்டது.

## தொழுகை அணிவகுப்பு

தொடர்ந்து தொழுகை அணிவகுப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டதும் மக்கள் வரிசைகளில் அணிவகுத்து நின்றார்கள். யார் முதலில் வந்தாரோ அவர்கள் முதல் வரிசையில் நின்றார்கள். தொடர்ந்து வந்தவர்கள் அடுத்தடுத்த வரிசைகளில் நின்றார்கள். ஒரு காலத்தில் தங்களுக்குள் பகைமை பாராட்டி வந்தவர்களும் குலபெருமை பேசி தாழ்ந்த குல மக்களோடு தீண்டாமை பாராட்டி வாழ்ந்தவர்களும் இன்று தோளோடு தோள் சேர்த்து சீரான வரிசைகளில் நேராக நின்று அணிவகுத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இன, நிற, மொழி, செல்வநிலை போன்ற வேற்றுமைகளைக் கடந்து நிற்கும் மனித சமத்துவ மற்றும் சகோதரத்துவ அணிவகுப்பு அல்லவாஅது. அன்று -பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் - அவர்கள் அணிவகுத்ததைப் போன்றே உலகெங்கும் பரவியுள்ள பள்ளிவாசல்களில் இஸ்லாமியர் ஐவேளையும் அதை நடத்தி வருவதைத்தான் இன்றும் நீங்கள் காண்கிறீர்கள்.

**மனிதகுல சகோதரத்துவத்தை நினைவூட்டுதல்**

நபிகளார் தலைமை தாங்கி தொழுகையை நிறைவேற்றினார்கள். தொழுகை முடிந்தபின் தன் இருப்பிடத்தில் இருந்து எழுந்து அமர்ந்துள்ள தோழர்களை நோக்கித் திரும்பி உரை நிகழ்த்தினார்கள். கீழ்கண்ட திருக்குர்ஆன் வசனங்களை அவர்களுக்கு முன்னால் ஓதினார்கள்:

● **மனிதர்களே, உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள். மேலும், அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான். மேலும், அவை இரண்டின் மூலம் (உலகில்) அதிகமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான். மேலும், எந்த அல்லாஹ்வின் பெயரைக் கூறி நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளைக்) கோருகின்றீர்களோ, அந்த அல்லாஹ்வுக்கே நீங்கள் அஞ்சுங்கள்! மேலும், இரத்தபந்த உறவுகளை சீர்குலைப்பதிலிருந்து நீங்கள் விலகி வாழுங்கள்! திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள்: அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:1)**

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்“ என்பது பொருள்)

மனிதகுல சகோதரத்துவத்தை பறைசாற்றும் இந்த இறைவசனத்தை முழுமையாக ஓதிக்காட்டினார்கள். உதவிகோரி வந்திருப்பவர்கள் வேற்று நாட்டவர் ஆயினும் வேற்று குலத்தவர் ஆயினும் தங்களின் உடன்பிறப்பே என்றல்லவா மனித குலத்தை படைத்தவன் இந்த வசனத்தில் கூறுகிறான்! மக்களின் மனங்கள் சகோதரத்துவ உணர்வு பூண்டன. தொடர்ந்து,

● **”இறைநம்பிக்கைகொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும், ஒவ்வொரு மனிதனும், நாளைய தினத்திற்காக எதனைத் தயார் செய்து வைத்திருக்கின்றான் என்று பார்க்கட்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சிய வண்ணம் இருங்கள். நீங்கள் செய்யும் செயல்கள் அனைத்தையும் திண்ணமாக அல்லாஹ் அறிபவனாக இருக்கின்றான். ”(திருக்குர்ஆன் 59:18)**

என்ற இறை வசனத்தையும் ஓதிக்காட்டி முளர் கூட்டத்தாருக்கு தர்மம் செய்யுமாறு கூறினார்கள் நபிகளார்.

நம்மைப் படைத்த இறைவனின் நேரடி வார்த்தைகளல்லவா திருக்குர்ஆன் என்பது! அந்த இறைவனே நம்மை எச்சரிக்கும்போது அதை அலட்சியம் செய்ய முடியுமா? நம்மிடம் உள்ள செல்வம் என்பது இறைவன் நம்மிடம் தந்த அமானிதப் பொருள் என்றல்லவா இஸ்லாம் கற்பிக்கிறது! மட்டுமல்ல, தங்கள் செல்வத்தில் ஒரு பகுதியை ஏழைகளோடு பங்கு வைப்பதை - அதாவது ஜகாத் கொடுப்பதை- தொழுகையைப் போன்றே கடைமயான ஒன்று என்று இஸ்லாம் கூறும்போது அதை தவிர்க்க முடியுமா?

நபிகளார் தொடர்ந்தார்கள்: ”சகோதரர்களே, உங்களில் ஒருவர் தமது பொற்காசு, வெள்ளிக்காசு, துணி, ஒரு சில கைப்பிடிகள் கோதுமை, சில கைப்பிடியளவு பேரீச்சம் பழம் ஆகியவற்றைத் தர்மம் செய்யட்டும்” என்று கூறினார்கள். ”அதற்கு முடியாதவர்கள் பேரீச்சம் பழத்தின் ஒரு துண்டையேனும் தர்மம் செய்யட்டும்” என்று வலியுறுத்தினார்கள்.

உடனே நபித்தோழர்களில் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளுக்குச் சென்று திரும்பினார்கள். தம்மிடமிருந்த பொற்காசுகளிலிருந்தும் வெள்ளிக்காசுகளிலிருந்தும் ஆடைகளிலிருந்தும் கோதுமையிலிருந்தும் பேரீச்சம் பழத்திலிருந்தும் தங்களால் ஆனதைக் கொண்டுவந்து தர்மம் செய்தார்கள். அப்போது மதீனா வாசிகளில் உள்ள ஒருவர் ஒரு பை நிறைய பொருட்களைக் கொண்டுவந்தார். அதைத் தூக்க முடியாமல் அவரது கை திணறியது.

**நபிகளாரின் முகத்தில் மகிழ்ச்சி**

பின்னரும் தொடர்ந்து மக்கள் தங்களின் தர்மப் பொருட்களுடன் வந்து கொண்டிருந்தனர். இறுதியில் உணவுப் பொருட்களாலும் ஆடைகளாலும் இரு குவியல்கள் சேர்ந்துவிட்டதை நான் கண்டேன்.

அப்போது நபிகளாரின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அது பொன்னைப் போன்று மின்னிக் கொண்டிருப்பதை நான் கண்டேன். "உலகோருக்கு ஒரு அருட்கொடை" என்று சும்மாவா கூறினான் இறைவன்!

தங்களை நாடி வந்த ஏழைகளுக்கு அந்த தர்மப் பொருட்களை வழங்கினார்கள் நபிகளாரும் அவரது தோழர்களும். வயிறார பசியாறினார்கள் வந்தவர்கள். கந்தைகளை மாற்றி புதுத்துணி உடுத்து மகிழ்ந்தார்கள். மனமார வாழ்த்தினார்கள் வழங்கியவர்களை.

நாட்டு மக்களை நேசிப்பதையும் அவர்களின் பசி தீர்ப்பதையும் அவர்கள் ஆபத்துக்கு உள்ளாகும்போது கூட நின்று அம்மக்களை காப்பதையும் வழிபாடாக கற்பிக்கிறது இஸ்லாம். "பூமியில் உள்ளோர் மீது கருணை காட்டுங்கள், வானத்தில் உள்ளவன் உங்கள் மீது கருணை காட்டுவான்" என்கிறது ஒரு நபிமொழி. நபிகளாரும் தோழர்களும் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் காட்டித் தந்த நடைமுறையை இன்றும் உண்மை இறைவிசுவாசிகள் உலகெங்கும் நடைமுறைப் படுத்திக் காட்டுகிறார்கள் என்பதற்கு நீங்களும் காலமுமே சாட்சி.

நம்பி வந்த ஏழைகளின் துயர் துடைத்து அனுப்பியதன் பின்னர்

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தன் தோழர்களுக்கு தொடர்ந்து அறிவுரை வழங்கினார்கள்:

- **"யார் இஸ்லாத்தில் ஓர் அழகிய நடைமுறையை உருவாக்குகிறாரோ அவருக்கு அதற்குரிய நன்மையும் அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் நன்மையும் உண்டு அதற்காக அவர்களது நன்மையில் எதுவும் குறைந்துவிடாது. அவ்வாறே, யார் இஸ்லாத்தில் ஒரு தீய நடைமுறையை உருவாக்குகிறாரோ அவருக்கு அதன் பாவமும் அவருக்குப் பின் அதன்படி செயல்படுபவர்களின் பாவமும் - அ(தன்படி செயல்பட்ட)வர்களின் பாவத்திலிருந்து எதுவும் குறையாமல் உண்டு" என்று கூறினார்கள்.**

இறுதியாக ...

மேற்படி நிகழ்வில் இருந்து இன்றைய இஸ்லாமியர்களும் பாடம் பெற்று அதை நடைமுறைப் படுத்தினால் அரசாங்கத்தின் உதவி இல்லாமலே வறுமையில்லா நாடாக நம் நாட்டை நாம் மாற்ற முடியாதா? சிந்தியுங்கள்!

(மேற்படி வரலாற்று நிகழ்வின் தகவல்கள் ஸஹீஹ் முஸ்லிம் (1848) என்ற நூலில் இருந்து பெறப்பட்டவை )

# கொரோனா தற்கொலைகளில் தவறு உண்டா?



● ஓமந்தூரார், ஸ்டான்லி மருத்துவமனைகளில் அடுத்தடுத்து கொரோனா நோயாளிகள் தற்கொலை - கொரோனா நோயாளிகள் மன அழுத்தத்தால், மருத்துவமனையில் தற்கொலை செய்துக் கொள்வது அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. (28-5-2020 இந்தியன் எக்ஸ்பிரஸ் தமிழ்)

● திருவனந்தபுரம்: கணவருக்கு கொரோனா என சந்தேகம்: ஆசிரியை தீக்குளித்துத் தற்கொலை (தினகரன் 2020-06-01)

● கொரோனா பாதித்த நபர் 5வது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். (தினமலர் 27.4. 2020, பெங்களூரு)

● அகமதாபாத்தில் கொரோனா வார்டில் பணியாற்றிய நர்ஸ் மாடியில் இருந்து குதித்து தற்கொலை. (சமயம்தமிழ்.காம்)

● கரோனா ஊரடங்கு காரணமாக சரிவர வருமானம் இல்லாமல் குடும்பத்தினரை பட்டினி போட வேண்டிய சூழ்நிலையில் ஆட்டோ ஓட்டுநர் ஒருவர் பிஹார் தலைநகர் பாட்னாவில் சனிக்கிழமையன்று தற்கொலை செய்து கொண்டார். (தமிழ் இந்து நாளிதழ் செய்தி)

கொரோனாவால் இந்தியாவில் கணிசமாக உயிரிழப்புகள் அதிகரித்து வரும் சூழலில், மன அழுத்தத்தால் தற்கொலைகளும் அதிகரித்து வருகின்றன. சாமானியர்கள் முதல் அரசு அதிகாரிகள், பிரபலங்கள் வரை பல்வேறு தரப்பினரையும் கொரோனா தொற்று கடும் மன அழுத்தத்திற்கு உள்ளாக்கியுள்ளது. கொரோனா ஊரடங்கால் வேலையிழந்த கூலித் தொழிலாளர்கள், ஐ.டி ஊழியர்கள், நஷ்டம் சந்தித்த சிறியது முதல் பெரிய வியாபாரிகள் எனப் பலர் தற்கொலை செய்துள்ளனர். கொரோனா தொற்று அச்சம் காரணமாகவும் சிலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

ஏற்கெனவே தேசிய குற்றவியல் ஆவண காப்பகத்தின் (NCRB) அறிக்கைப் படி நாளொன்றுக்கு 371 தற்கொலைகள் காவல் நிலையங்களில் பதிவாகின்றன! அவ்வாறு பதிவாகாத தற்கொலைகள் இதைவிட ஆறு மடங்கு என்கிறது இன்னொரு புள்ளிவிவரம்!

கல்வி கற்றவர் நிலையும் கல்லாதவர் நிலையும் இங்கு ஒன்றாகவே இருப்பதைப் பார்க்கலாம். இக்கட்டான ஒரு சூழ்நிலையில் மூழ்கியுள்ள ஒருவருக்கு துன்பங்களுக்கு மேல் துன்பங்கள் இனியும் வர இருக்கின்றன என்று உணரும்போது அவர், 'இனி எதற்காக வாழவேண்டும்?' 'வாழ்ந்து என்ன பயன்?' 'வாழ்க்கையை முடித்துக் கொள்வதே நல்லது' என்றெல்லாம் சிந்திக்க ஆரம்பிக்கிறார். இறுதியில் உணர்வுகள் மேலிட அவர் தன் வாழ்க்கையை முடித்திட தற்கொலையில் சரணடைகிறார்.

## தற்கொலையில் தவறு உண்டா?

இதில் என்ன தவறு? என்று நீங்கள் கருதலாம். சூழ்நிலைகளைக் காரணம் காட்டி ஏதாவது தற்கொலையை நியாயப் படுத்தவும் கூடும். தற்கொலையில் தவறு இல்லை என்று நீங்கள் முடிவுக்கு வருவீர்களானால் கீழ்கண்ட கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது என்பது பற்றி

யோசியுங்கள்:

● நீங்கள் சிறுவயது முதல் இரவுபகலாக உழைத்து கஷ்டப்பட்டு ஆளாக்கிய உங்கள் மகன் பிளஸ் டூ தேர்வில் மதிப்பெண் குறைந்து போனதற்காக தற்கொலை செய்து கொண்டால் சரி என்பீர்களா?

● உங்களை வளர்த்து ஆளாக்கும் முன் திடீரென்று ஏதோ ஒரு காரணத்துக்காக தற்கொலை செய்து கொண்டு உங்களை நிர்கதியாக விட்டுச்சென்ற பெற்றோரின் செயலை நீங்கள் சரி என்று கூறமுடியுமா?

● நீங்கள் விற்ற சரக்குக்கு பணம் தரவேண்டிய ஒரு வியாபாரி உங்களுக்கு பணம் தராமல் தற்கொலை செய்து கொள்கிறார்..

● ஒரு நாட்டின் முக்கியமான பொறுப்பை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நபர் திடீரென தற்கொலை...

இவ்வாறு எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம்.

ஆக, தற்கொலைகளில் தவறில்லை என்ற முடிவுக்கு மக்களோ அல்லது சமூகங்களோ வருமானால் அங்கு வாழ்க்கையில் கட்டுப்பாடு, சட்டம், ஒழுங்கு என்பவை அர்த்தமற்றதாகிவிடும் என்பதை உணரலாம். மேலும் தற்கொலை என்பது தனிநபரை மட்டுமல்ல, அவர் சார்ந்த சமூகத்தையும் நாட்டையும் பாதிக்கக் கூடியது என்பதையும் நாம் அறியலாம்.

ஒருவேளை தற்கொலை செய்துகொள்ளும் நபர் நினைக்கலாம் 'என் தற்கொலையால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை, நான் இவ்வுலகை விட்டுப் போகிறேன் அவ்வளவுதான், இதில் என்ன தவறு?" என்று. ஆனால் அவர் தற்கொலை செய்துகொண்டால் அவராக வந்து தன் உடலை அடக்கம் செய்வது இல்ல. அவரது உடல் அழுகினாலும் நாற்றமடித்தாலும் அவராக வந்து அதை அகற்றுவதில்லை. எல்லாம் அவர் சார்ந்த குடும்பமோ சமூகமோதான் செய்ய வேண்டிய உள்ளது.

எனவே என் உயிர், எனது உரிமை, என்னுயிரை போக்கிக் கொள்வது என் விருப்பம் என்ற வாதம் அனைவருக்கும் ஆபத்தானது. இன்னும் பொய்யானது என்பதே உண்மை!

## 'என்னுயிர்' உண்மையில் எனதா?

என் உரிமை என் உரிமை என்று மனிதன் எதைக் கோர முடியும்? அதை அறிவதற்கு முன்னால் அவனது நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலில் இவ்வுலகில் அவனுடையது என்று என்ன இருக்கிறது, மற்றும் அவனது அதிகாரத்தின் பலம் எவ்வளவு என்பதை அறிந்த பின்னரே அவனது உரிமை அல்லது சுதந்திரம் பற்றி தீர்மானிக்க முடியும்.

● மனிதன் தனது என்று எதை சொல்லிகொண்டாலும் உண்மையில் அவனது உடல், பொருள், ஆவி அல்லது உயிர் என அனைத்துமே அவனுடைய கட்டுப்பாட்டில் உள்ளவை அல்ல என்பதை அறிவோம். அவை யாவும் இவ்வுலகைப் படைத்தவனால் அவனுக்குத் தற்காலிகமாக வழங்கப்பட்டவையே. அந்த இறைவன் அவன் நாடும்போது இவற்றைக் கொடுக்கவும் பறிக்கவும் செய்கிறான் என்பதுதான் உண்மை. எனவே மனிதர்களுக்கும் அவர்கள் வாழும் இவ்வுலகுக்கும் அதில் உள்ளவற்றுக்கும் உண்மையான சொந்தக்காரன் எவனோ அவன் மட்டுமே இதைத் தீர்மானிக்க முடியும். எனவே மனிதன் தானாக தன் உரிமையை தீர்மானிக்க முடியாது என்பது தெளிவாகிறது.

● அடுத்ததாக, இறைவன் மட்டுமே அவனது படைப்பினங்களையும் அவர்களின் தேவைகளையும் பரிபூரணமாகவும் மிகமிக நுணுக்கமாகவும் அறிந்தவன். முக்காலத்தையும் முழுமையாக உணர்ந்தவன். யாருக்கு எவ்வளவு உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் முழு ஞானம் அவனுக்கு மட்டுமே உள்ளது,

● அடுத்ததாக, இந்தத் தற்காலிக உலகம் என்பது ஒருநாள் அழியும் என்பதும் இதில் ஒவ்வொரு மனிதனும் அவனுக்கு விதிக்கப்பட்ட ஒரு குறுகிய தவணையில் இங்கு வந்து போகிறான் என்பதும் அனைவரும் புரிந்துகொண்ட ஓர் உண்மை. அதாவது இவ்வுலகை ஒரு பரீட்சைக் களமாகப் படைத்துள்ளான் இறைவன். மறுமையில் இறுதித் தீர்ப்புநாள் அன்று அவரவர்க்கு வழங்கப்பட்ட உரிமைகளைப் பற்றியும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளைப் பற்றியும் அவன் முழுமையாக விசாரிக்கவும் உள்ளான். அவற்றைப் பேணி நடப்போருக்கு வெகுமதியாக சொர்க்க வாழ்வையும் பேணாமல் தான்தோன்றிகளாக நடப்போருக்கு தண்டனையாக நரகத்தையும் அவன் வழங்கவுள்ளான்.

எனவே அந்த இறைவன் தரும் வழிகாட்டுதலின் அடிப்படையில் தனிமனித உரிமைகளைத் தீர்மானிப்பதே அனைவருக்கும் சிறந்தது என்பதை நாம் அறியலாம். அந்த இறைவன் எதை செய் என்று சொல்கிறானோ அதுவே சரி அல்லது நன்மை அல்லது புண்ணியம் என்பதையும் அவன் எதை செய்யக்கூடாது என்று தடுத்துள்ளானோ அதுவே தவறு அல்லது தீமை அல்லது பாவம் என்பதையும் நாம் புரிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

## தற்கொலை இறைவனால் தடுக்கப் பட்டது

இறைவனின் அளவுகோல் படி தற்கொலை என்பது தடுக்கப்பட்டது. எனவே இது ஒரு பாவச்செயல் ஆகும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இறைவன் புறத்தில் இருந்து வந்துள்ள இறுதி வேதம் திருக்குர்ஆனும் இறுதி இறைத்தூதர் மொழிகளும் அவற்றை கூறி நிற்கின்றன.

தற்கொலை பற்றி இறைவன் என சொல்கிறான்?

● **உங்கள் கைகளாலேயே நீங்கள் அழிவை தேடிக்கொள்ளதீர்கள் ! (அல்குர்ஆன்2:195)**

● **உங்களை நீங்களே கொலை செய்து கொள்ளாதீர்கள் ! இறைவன் உங்கள் மீது மிக கருணை உள்ளவனாக இருக்கிறான்! (குர்ஆன் 4:29)**

இறைவனின் எச்சரிக்கையையும் மீறி தற்கொலை செய்து கொள்வோரின் நிலை என்ன என்பது பற்றி இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறுவதையும் பாருங்கள்:

● **”ஒரு (கூரான) ஆயுதத்தால் தற்கொலை செய்து கொண்டவர் (மறுமையில்) தீசூழ் நரகிலும் தமது கையில் அந்தக் கூராயுதத்தை வைத்துக் கொண்டு, அதனால் தமது வயிற்றில் தாமே என்றென்றும் முடிவின்றிக் குத்திக் கொண்டே இருப்பார். விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டவர், தீசூழ் நரகிலும் என்றென்றும் முடிவின்றி விஷத்தைக் குடித்துக் கொண்டேயிருப்பார். மலையின் உச்சியிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்து கொண்டவர், தீசூழ் நரகில் (மீண்டும் மீண்டும்) தள்ளப் பட்டு, மேலும் கீழும் நிரந்தரமாகக் குதித்துக் கொண்டே இருப்பார்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

**அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புஹாரி**

# நோய் பரவலைத் தடுக்கும் இஸ்லாமிய வழிமுறைகள்

மனித உடலை விட்டு வெளியேறக் கூடிய தும்மல், எச்சில், கபம், சிறுநீர், மலம் என அனைத்தும் உடல் தனக்கு வேண்டாம் என்று வெளியேற்றும் கழிவுகளே. இவை பெரும்பாலும் நோய் பரப்பும் நுண்ணுயிரிகளுக்கு உணவாகின்றன. இவற்றை முறையாகக் கட்டுபடுத்துவது நோய்கள் பரவலைத் தடுக்கும். இக்கழிவுகள் மற்றவர்களை பாதிக்கக் கூடாது என்பதற்காக மக்கள் பேணவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இறைவன் தன் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மூலமாக கற்றுத் தருவதை நாம் காணலாம். தொழுகை போன்ற கட்டாயக் கடமைகளோடு நபிகளாரின் அன்றாட வழிமுறைகளைப் பின்பற்றுவதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது.

**தூய்மை - நம்பிக்கையில் பாதி**

இஸ்லாம் தூய்மைக்கு முதலிடம் கொடுக்கிறது

- **”சுத்தம் இறைநம்பிக்கையில் பாதியாகும் என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

*அறிவிப்பவர் : அபூ மாலிக் அல்அஷ்அரீ நூல் : (முஸ்லிம்)*

- **திண்ணமாக இறைவன், தீமையிலிருந்து விலகி இருப்பவர் களையும், தூய்மையை மேற்கொள்பவர்களையும் நேசிக்கின்றான். (திருக்குர்ஆன் 2:222)**

- **இறைவன் உங்களுக்கு அளித்துள்ள பொருள்களில் அனுமதிக் கப்பட்டதும், தூய்மையானதுமான பொருள்களை உண்ணுங்கள். மேலும், எந்த இறைவன் மீது நீங்கள் நம்பிக்கை கொண்டு இருக்கிறீர்களோ அவனுக்கு மாறு செய்வதிலிருந்து விலகி வாழுங்கள். (திருக்குர்ஆன் 5:88)**

**நோய்கிருமிகள் பரவாமலிருக்க..**

- **நபி (ஸல்) அவர்கள் தும்மினால், தம் கையைக் கொண்டு அல்லது தன் துணியை வாயில் வைத்துக் கொள்வார்கள். இதன் மூலம் தன் (தும்மல்) சப்தத்தை (மறைத்துக்) கொள்வார்கள். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), அபூ தாவூத் திர்மீதி)**



தும்மலின்போது காற்றில் வெளியேறும் வைரஸ் கிருமி நீர்த்திவலைகள், மணிக்கு 100 மைல் வேகத்தில் வெளியேறும். இதன் மூலமாக எதிரில் இருக்கும் நபர்களுக்கு வைரஸ் நோய் பரவ வாய்ப்புள்ளது. ஆகவே தும்மலின் வேகத்தை குறைப்பதற்கு கையை அல்லது துண்டை வைத்து மறைப்பதை இஸ்லாம் வழிமுறையாக ஆக்கிவைத்துள்ளது. இது போன்று தான் கொட்டாவி விடுதலையும் இஸ்லாம் மறைக்கக் சொல்கிறது.

- **“உங்களில் ஒருவர் கொட்டாவி விட்டால், தன் கையால் வாயை**

**மூடட்டும். நிச்சயமாக, ஷைத்தான் அதன் வழியாக நுழைந்து விடுவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி), முஸ்லீம்.**

### துயில் எழுந்ததும் தூய்மை

*காலையில் தூங்கி எழுந்தவுடன் முகம், வாய், மூக்கை சுத்தம் செய்ய மார்க்கம் கட்டளையிடுகிறது.*

**● உங்களில் ஒருவர் உறங்கி எழுந்ததும் (தமது மூக்கிற்குள் நீர் செலுத்தி) மூக்கை மூன்று முறை சீற்றி சுத்தம் செய்யட்டும். ஏனெனில் ஷைத்தான் அவர் உள் மூக்கில் தங்குகின்றான்., என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லீம்)**




### எச்சிலை மண்மூடி மறைத்தல்

*வெளி இடங்களில் எச்சில் துப்பினால் அதை மண்ணைப் போட்டு மறைக்கும் படி இஸ்லாம் ஏவுகிறது.*

**● நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என் சமூகத்தின் நல்ல செயல்களும், தீய செயல்களும் எனக்கு எடுத்துக் காட்டப் பட்டன. அவற்றில் மூடப்படாத எச்சிலே தீய செயல்களின் பட்டியலில் அதிகமாக இருப்பதைக் கண்டேன்" (முஸ்லிம்)**

### சிறுநீர் மற்றும் மலம் இவற்றிலிருந்து சுத்தம் பேணுதல்

*இறைவிசுவாசிகளுக்கு கடமையாக்கப்பட்ட தினசரி ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு உடல், உடை, இடம் இவை அனைத்தும் மலம் மற்றும் சிறுநீரில் இருந்து தூய்மையாக இருக்கவேண்டும் என்ற வரையறை உள்ளது. ஆண் குழந்தைகளுக்கு செய்யப்படும் "கத்னா" எனப்படும் பிறப்புறுப்பின் முன்தோல் நீக்கும் அறுவை சிகிச்சைக்கு வேறு சில காரணங்கள் இருந்தாலும் அது முக்கியமாக சிறுநீரில் இருந்து உடலையும் உடையையும் தூய்மையாக வைத்திருக்கும் பொருட்டே நிறைவேற்றப் படுகிறது.*

### சிறுநீர் சுத்தமும் முக்கியமானது

*சிறுநீரைப் பொறுத்தவரையில் அது அசுத்தமான ஒன்று என்ற உணர்வு பெரும்பாலானோருக்குக் கிடையாது. உடலிலோ உடையிலோ இருப்பிடங்களிலோ மலம் பட்டுவிட்டால் பொதுவாக அனைவரும் முக்கியத்துவம் கொடுத்து சுத்தம் செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் சிறுநீருக்கு இதே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. பள்ளிகளிலும் சரி, வீடுகளிலும் சரி, பொதுமக்களுக்கு இடையிலும் சரி இதுபற்றி போதிக்கப்படுவது இல்லை. இதன் காரணமாக வீடுகளில் குழந்தைகள் சிறுநீர் கழித்தாலோ பெரியவர்கள் சாலை ஓரங்களிலும் சுவர்களிலும் சிறுநீர் கழித்தாலோ அவற்றை யாரும் பொருட்படுத்தப்படாத நிலை தொடர்கிறது. சிறுநீரும் கழித்த பின் சுத்தப்படுத்தப் படவேண்டிய விஷயமே என்பதை மக்கள் உணராததன் காரணமாக வீடுகளிலும் சாலைகளிலும் சிறுநீரின் நாற்றத்தையும் அதன்மூலம் உண்டாகும் சுகாதார*

சீர்கேடுகளையும் நாம் சகித்துக் கொண்டே வாழவேண்டியுள்ளது. ஆனால் தூய இறைமார்க்கமோ வழிபாட்டின் ஒரு முக்கியப் பகுதியாக சிறுநீர் பற்றிய பேணுதலைக் கற்பிக்கிறது. குழந்தைகள் ஏழு வயதில் இருந்தே அந்தப் பேணுதலுக்குப் பழக்கப்படுத்தப் படுகிறார்கள்.

● **இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தோட்டத்தைக் கடந்து சென்றார்கள். அப்போது அவர்கள், “இந்த சமாதிகளில் அடங்கியுள்ளவர்கள் வேதனை செய்யப்படுகிறார்கள். பெரிய (குற்றம்) ஒன்றுக்காக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. மாறாக அவர்களில் ஒருவன் சிறுநீர் கழித்து விட்டுத் தூய்மை செய்யாதவனாக இருந்தான். மற்றொருவன் கோள் சொல்லித் திரிபவனாக இருந்தான்“ என்று கூறினார்கள்.**

அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) (நூல்: நஸயீ)

### பொது இடங்களில் கழிவுப்பொருள்

பொது இடங்களான சாலை ஓரங்கள், இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகிய இடங்களை அசுத்தப்படுத்துவதன் மூலம் நோய் பரவலுக்கு துணைபோகிறார்கள் என்பது மட்டுமல்ல பல மக்களின் சாபத்திற்கும் ஆளாகிறார்கள்.. இந்தத் தீய செயலை இறைவனின் இறுதித்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டிக்கிறார்கள்.

● **ஒருமுறை அவர்கள், “சாபத்தைப் பெற்றுத் தரும் இரு காரியங்களை விட்டு விலகிக் கொள்ளுங்கள்“ என்று கூறினார்கள். மக்கள், “சாபத்தைப் பெற்றுத் தரும் அந்த இரண்டு விஷயங்கள் என்ன?“ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், “மக்கள் (செல்லும்) பாதையில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல், அல்லது அவர்கள் நிழலாறக் கூடிய இடத்தில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல்“ என்று கூறினார்கள்.**

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம்

பொது இடங்களில் குப்பை மற்றும் நாற்றம் வீசும் கழிவுப்பொருள்களைக் கொட்டுவோருக்கும் இந்த எச்சரிக்கை பொருந்தும் என்பது சொல்லித் தெரியவேண்டியது இல்லை.

# கொள்ளைநோய் பரவும்போது..

### நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் தடை

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

● ”ஓர் ஊரில் கொள்ளை நோய் பரவியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டால் அந்த ஊருக்கு நீங்களாகச் செல்லாதீர்கள். நீங்கள் ஓர் ஊரில் இருக்கும்போது அங்கு கொள்ளைநோய் பரவினால் அதிலிருந்து வெருண்டோடுவதற்காக (அவ்வூரைவிட்டு) வெளியேறாதீர்கள்“ (அறிவிப்பு: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.்.ப் (ரலி) - புகாரி)

● “வியாதி பீடித்த ஒட்டகத்தை ஆரோக்கியமான ஒட்டகத்திடம் கொண்டு செல்லாதீர்கள்” (அறிவிப்பு: அபூஹுரைரா (ரலி) - புகாரி)

வாசகர்கள் கீழ்கண்ட முறைகளில் சந்தா அனுப்பலாம்:

1. வங்கி மூலம் :

House Of Peace, ICICI bank, Indra Nagar branch, Bangalore. Account no. 016901013432

IFScode: ICIC0000169

2. PAYTM மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

3. GOOGLEPAY மூலம் சந்தா செலுத்த: இங்கு காணப்படும் QR CODE ஐ SCAN செய்து உங்கள் தொகையை செலுத்தலாம். தொடர்ந்து 9845373775 என்ற எண்ணுக்கு உங்கள் சந்தா எண் மற்றும் தொகை குறிப்பிட்டு SMS மூலம் தகவல் அனுப்பவும்.

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 6382301984, 9600426150, 9994810734 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 அதிராம்பட்டினம் 9566811099 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn.No. KRNA/BGE/1057/2018-2020
Posted at Bangalore PSO, Mysore road, Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of pages:24+4
Licenced to post without prepayment. Licence No.WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)


To

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................




"பெற்றோரைக் கொடுமைபடுத்தியதற்காகத் தரப்படும் தண்டனை மரணத்திற்குமுன் இவ்வுலகிலேயே துரிதமாகத் தரப்பட்டுவிடும்"– நபிமொழி